## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் 2020 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று,தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று, அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2020 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கவேண்டுமென கருதுகின்ற எனது கருத்துக்கள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்படுகின்றது.

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து,பணியகத்தின் நிதிக் கூற்றுகள் ஊடாக 2020 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக்கொண்டு எனது அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது. இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

## 1.3. நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது,பணியகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பணியகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பணியகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பணியகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4. நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக பணியகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு பணியகத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பணியகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக

காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பணியகத்தினதொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து பணியகத்தின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல்,முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,
- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது பணியகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.
- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,
- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக் கூற்றுகள்

### 1.5.1 நிதிக் கூற்றுகள் தயாரித்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல்வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் உறுதியான அதிகாரத்துடன் செயற்படல், உரியதான அறிக்கையிடல்களை நியமங்களுக்கு ஒழுங்கமைவாக தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்தல், சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை பேணிச் செல்லுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் உரிய அதிகாரத்துவத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல், குறிப்பு வைக்கப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப் பகுதிக்குள் ஒப்பிடுதல், வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுத்தல் என்பவற்றுக்கு நியாயமான உறுதியினை பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான‘‘சிறப்பாக திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை பணியகத்தால் பேணிச்செல்லுதல் அத்தியாவசியமாகும்.

### 1.5.2 இலங்கை தரநியமங்களுக்கு இணங்காமை

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ)பணியகத்திற்கான பெறுமதி ரூபா. 927,432,838ஆன சொத்து அலகுகள் 15,664ம்மற்றும் தொழிலாளர் நலன்புரி நிதியத்திற்கான பெறுமதி ரூபா. 260,519,329ஆன சொத்துக்களின் உருப்படிகள்ரூபா. 17,518ம் முற்றுமுழுதாக தேய்மானம் செய்திருப்பினும், மேலும் பயன்படுத்தப்பட்டு வந்தது. குறித்த சொத்துக்கள் தொடர்பில் இலங்கை கணக்கீட்டு நியமம்16 இல் 51 ஆவது பந்தி மற்றும் இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 8 கணக்கீட்டு கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளின் வேறுபாடுகள் மற்றும் தவறுகள் பிரகாரம் பணியகத்தால் வருடாந்த மீளாய்வு மேற்கொள்ளப்பட-வில்லை. | நியாயமான பெறுமதி கணக்கிடுதல் தொடர்பாக நிபுணத்துவ தொழில்நுட்ப அறிவுள்ள பணியாற்றொ-குதி சபையிடம் இல்லை. ஆகையால், அது தொடர்-பாக நிபுணத்துவ தொழில்-நுட்ப அறிவுள்ள வெளியக தரப்பு மூலம் மேற்கொண்டு நியாயமான பெறுமதியினை கணக்குகளில் சீராக்குவ-தற்கு தேவையான நடவடி-க்கைகளை எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கின்றேன். | இலங்கை கணக்கீட்டு நியமங்கள் பிரகாரம் சொத்துக்களின் செவ்-வையான பெறுமதி நிதிக் கூற்றுகளில் குறிப்பிடுவதற்கு நடவடிக்கை மேற்-கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) பயன்படுத்தும் உரிமைகளுடன் கூடிய (Right of use assets) குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட சொத்துக்கள் தொடர்பில் இலங்கை நிதி அறிக்கையிடல் தரம் 16 இல் 32 ஆவது பந்தி பிரகாரம், குத்தகை கொள்வனவாளர் சொத்தினை பயன்படுத்தும் உரிமை தொடங்கிய திகதி தொடக்கம் சொத்தின் பயனுள்ள ஆயுட்காலம் இறுதி வரை அல்லது குத்தகை தவணை இறுதி வரை ஆகிய இரண்டில் குறைந்த காலப் பகுதிக்குள் தேய்மானம் கணக்கிடுதல் வேண்டுமாயினும், பணியகத்தால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த பயன்படுத்தும் உரிமையுடன் கூடிய 05 வாகனங்கள் தொடர்பில் குறைந்த காலப் பகுதியான குத்தகை தவணை அடிப்படையாகக் கொண்டு தேய்மானம் கணக்கிடாமை காரணமாக மீளாய்விற்கான ஆண்டுக்கு ஏற்புடையதாக ரூபா. 2,694,052ஆன தேய்மானம் குறைவாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | 2021 ஆண்டுக்காக கணக்-குகளை தயாரிக்கையில் இந்த வேறுபாடுகளை செவ்வையாக்குவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்கின்றேன். | இலங்கை நிதி அறிக்கையிடல்களை நியமங்களுக்கமைவாக நிதிக் கூற்றுகளை தயாரி-த்தல் வேண்டும். |
| (இ) 2015 ஆம் ஆண்டின் பணியகத்தால் ரூபா.52,000,000ஆன குத்தகை அடிப்படையின் மீது பெற்றுக்கொண்ட காணி, இலங்கை நிதி அறிக்கையிடல் நியம இலக்கம் 16 பிரகாரம், குத்தகை சொத்தாக அடையாளம் காணாது சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் கீழ் நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. அதே-போன்று மேலும் செலுத்தப்பட வேண்டிய ரூபா. 26,000,000 ஆன தொகை குத்தகை | காணியினை இதுவரை பயன்படுத்தாத படியால் இந்த காணியை பயன்-படுத்தும் உரிமையுடன் கூடிய சொத்துகளாக நிதிக் கூற்றுகளில் குத்தகை சொத்துகளின் கீழ் காண்பிக்கப்படவில்லை.<br><br>இதன்மூலம் ஐந்தொகை- | இலங்கை நிதி அறிக்கையிடல் நிய-மங்களுக்கமைவாக நிதிக் கூற்றுகளை தயாரித்தல் வேண்டும். |

| | |
|---|---|
| பொறுப்பாக நிதி நிலைமை கூற்றில் காண்பிக்கப்படுதல் வேண்டுமாயினும், குறித்த பெறுமதி பல்வேறு கடன்கொடுநர்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. குறித்த குத்தகை காணக்கு ஏற்புடையதாக 2015 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்விற்கான ஆண்டு வரை மொத்தம் ரூபா. 5,720,000 ஆன தேய்மானம் கணக்கு வைக்கப்படவில்லை. | யில் முழுமொத்த சொத்துக்களின் மீது தாக்கம் ஏற்படவில்லை. ஆயினும் 2021 ஆம் ஆண்டில் ஏற்புடைய செவ்வையான கணக்கு குறிப்புகளை சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கின்றேன். |

### 1.5.3 கணக்கீட்டு குறைப்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்விற்கான ஆண்டில் திசெம்பர் 31 ஆந் திகதியில் பணியகத்தின் தேறிய பெறுமதி ரூபா. 1,521,103,398ஆன சொத்துக்கள் தொடர்பில் 2010 ஆம் ஆண்டின் பின்னர் மீள்கணிப்பீடு செய்யாமை காரணமாக குறித்த சொத்துக்களின் உண்மையான பெறுமதி, நிதிக் கூற்றுகள் மூலம் வெளிப்படுத்தியுள்ள பெறுமதிகளிலிருந்து மதிப்பிழக்கப்படுதல் அல்லது மிகைமதிப்பிடல் ஏற்பட்டுள்ளதாக அவதானிக்கப்படுகிறது. | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் மூலம் சொத்துக்களை மீள்கணிப்பீடு செய்து எதிர்வருங் காலத்தில் தேவையான கணக்கீட்டு சீராக்கல்களை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கின்றேன். | இலங்கை கணக்கீட்டு நியமம் பிரகாரம் சொத்துக்களை மீள்கணிப்பீடு செய்து சரியான பெறுமதியினை நிதிக் கூற்றுகளில் குறிப்பிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) நிலையான வைப்புகளின் வட்டி தொகையான ரூபா.93,669,604ஐ வெளிநாட்டு அந்நியச் செலாவணி பரிமாற்ற இலாபமாக தவறுதலாக காண்பிக்கப்பட்டிருத்தலும், அந்நியச் செலாவணி பரிமாற்ற இலாபம் கணக்கிடும் தவறுகள் காரணமாக ரூபா.23,730,274 ஆல் அதிகமாக காண்பிக்கப்பட்டிருத்தலும் முன்னரான ஆண்டின் அந்நியச் செலாவணி பரிமாற்ற இலாபத்திற்கு சீராக்கப்பட வேண்டிய ரூபா. 10,585,113 ஐ ஆண்டின் இலாபத்திற்கு சீராக்கப்படுதலும் காரணமாக மீளாய்விற்கான ஆண்டின் அந்நியச் செலாவணி பரிமாற்ற இலாபம் ரூபா. 127,984,991 ஆல் அதிகமாக காண்பிக்கப்பட்டிருந்தது. அதன்படி மீளாய்விற்கான ஆண்டில் நட்டம் அந்த அளவிலயே குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | நிலையான வைப்புகளின் வட்டி ரூபா.93,669,604ஐ தவறுதலாக அந்நியச் செலாவணி பரிமாற்ற இலாபமாக குறிப்பிடுதல் காரணமாக அவ்வாறு வருமானம் குறைவாகவும் மற்றைய வருமானம் அதிகமாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. | இவ்வாறான கணக்கீட்டு குறைப்பாடுகள் மீண்டும் ஏற்படாதிருப்பதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (இ) கணக்காய்வில் மேற்கொண்ட கணக்கிடல் பிரகாரம், மீளாய்விற்கான ஆண்டுக்கு ஏற்புடையதாக பிற்போடப்பட்ட வரி மிகை ஒதுக்கிடல் ரூபா. 143,406,716 ஆவதுடன், அதில் ஆண்டுக்கு ஏற்புடையதான ரூபா. 25,829,025 ஆன வரி செலவினம் | பிற்போடப்பட்ட வரி கணக்கிடல் திருத்தம் செய்து செவ்வையாக சமர்ப்பிக்கப்படுவதுடன், 2021 ஆம் ஆண்டின் பிற்போடப்பட்ட வரியினை கணக்கிடல் மற்றும் கணக்கு வைத்தல் | குத்தகை செலவினம் ஊடாக நிதிக் கூற்றுகளுக்கான தாக்கங்களை செவ்வையாக வெளிப்படுத்துகின்ற வகையில் கணக்கீட்டு குறிப்புகளை வைப்பதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| சீராக்கப்பட்டதன் பின்னர் விரிவான வருமானக் கூற்றில்,ரூபா. 117,577,691 ஆன வரி மிகை ஒதுக்கீடாக சீராக்கப்படுதல் வேண்டுமாயினும்,ரூபா . 106,206,904 ஆன குத்தகை செலவினம் காண்பிக்கப்பட்டிருந்தது. அதேபோன்று நிதி நிலைமை கூற்றில் பிற்போடப்பட்ட வரி சொத்தாக ரூபா. 127,248,426 ஐ காண்பிக்க முடியுமாயினும்,ரூபா. 172,343,405 ஆன பிற்போடப்பட்ட வரி பொறுப்பாக காண்பிக்கப்பட்டிருந்தது. | என்பன செவ்வையாக மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கின்றேன். | எடுத்தல் வேண்டும். |
| (ஈ)மீளாய்விற்கான ஆண்டுக்கு ஏற்புடையதாக ரூபா. 93,669,604 ஆன நிலையான வைப்புகளின் வட்டி வருமானம் கணக்கு வைக்கப்படாமை காரணமாகவும் கணக்கு வைக்கும் வழுக்கள் காரணமாகவும் ரூபா.1,082,335 ஆல் நிலையான வைப்புகளின் வட்டி அதிகமாக குறிப்பு வைத்ததால் ஆண்டுக்கு ஏற்புடையதான நிலையான வைப்புகளின் வட்டி ரூபா. 92,587,269 ஆல் குறைவாக நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | வட்டி வருமானம் கணக்கிடுகையில் ஏற்பட்டுள்ள வழுவினை எதிர்வரும் ஆண்டில் செவ்வையாக்கப்படும். | இவ்வாறான கணக்கீட்டு குறைப்பாடுகள் மீண்டும் ஏற்படாதிருப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) கட்டிடங்கள் மற்றும் ஏனைய அலுவலக உபகரணங்களின் தேய்மானம் கணக்கிடுவதன் வழுக்கள் காரணமாக ஆண்டுக்கு ஏற்புடையதான தேய்மானம் ரூபா.4,485,317ஆல் அதிகமாக நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. அதேபோன்று மீளாய்விற்கான ஆண்டில் திசெம்பர் 31 ஆந் திகதியில் கட்டிடங்கள் மற்றும் பணினிகளுக்கு ஏற்புடையதான திரட்டிய தேய்மானம் ரூபா. 1,097,623,115 ஆயினும், நிதி நிலைமை கூற்றில் குறித்த பெறுமதி ரூபா. 1,121,258,901 என்று காண்பிக்கப்பட்டிருத்தல் காரணமாக சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் தேறிய பெறுமதி ரூபா. 23,635,786 ஐ குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | நிலையான சொத்துக்களின அட்டவணைகளில் 2019 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரையிலான ஆண்டுகளுக்கு ஏற்புடையதாக ஆரம்ப மீதி சரியாக சீராக்கப்படாமை காரணமாக இந்த மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டுக்காக கணக்குகளை தயாரிக்கையில் இந்த மாற்றங்களை செவ்வையாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றேன். | நிலையான சொத்துக்களுக்கான தேய்மானங்களை கணக்கு வைத்தல் மற்றும் செவ்வைப்படுத்தல் வேண்டும். |
| (ஊ) காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கையில் ஏற்பட்டுள்ள குறைப்பாடுகள் பின்வருமாறாகும்.<br>(i) செயற்பாட்டு மூலதனத்தின் மாற்றங்களை சீராக்கும் போது, கொடுப்பனவுகள் மற்றம் ஏனைய கிடைக்கப்பெறுதல்களில் அதிகரிப்பு ரூபா.15,312,417 ஐ அதிகமாகவும், நடைமுறை சொத்துக்களின் கீழ் | எதிர்வரும் ஆண்டில் காசுப் பாய்ச்சல் கூற்றினை செவ்வையாக்குவதற்கு தேவையான நட்வடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | முகாமைத்துவ தீர்மானங்களை மேற்கொள்வதற்கு இலகுவான வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படுதல் வேண்டும். |

குறிப்பிடப்பட்டு அரசாங்கத்தின் வருமானத்தில் பதிவழிக்கப்பட்டிருந்த பெறுமதி ரூபா. 21,912,150 ஐsurplus trust fund இன் பெறுமதி குறிப்பிடப்படாமையும், குவேட் நட்டஈட்டு நிதியத்தின் பெறுமதி ரூபா. 51,802,119ஐ அதிகமாகவும், வெளிநாட்டு தொழிற்படையினரின் பங்களிப்பு ரூபா. 526,375 ஆல் அதிகரித்திருத்தலை கவனத்தில் கொள்ளாமையும் காரணமாக காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு மூலதனத்தின் வேறுபாடு ரூபா. 29,447,539 ஐ அதிகமாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii) பணத்தால் கிடைக்கப்பெற்ற வட்டி வருமானம் ரூபா. 611,799,366 ஐ அதிகமாக காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(iii) திறைசேரி முறிகளை விடுவிப்பதன் மூலம் கிடைக்கப்பெற்ற ரூபா.13,463,421ஐ குறைவாக காசுப் பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(iv) நிதிசார் சொத்துக்களினது முதலீடுகளின் தேறிய பெறுமதி பேரேடு பிரகாரம்,ரூபா. 276,912,664ஆயினும், திருத்தம் செய்யப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்றின் பெறுமதி ரூபா.310,718,160ஆன எதிர்மறை பெறுமதியாக குறிப்பிடப்பட்டிருந்தது.

(எ) வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்களின் பொருட்டு செலுத்தப்பட வேண்டிய நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டுள்ள பெறுமதி ரூபா.281,344,569ஆன மீதிகளின் மொத்தம் ரூபா.101,481,502ஆன 64 மீதிகளுக்கு ஏற்புடையதாக மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன், அதில் 14 கடன்கொடுநர்களின் மீதிகள் மட்டும் கணக்காய்விடம் கிடைக்கப்பெற்றது. குறித்த உறுதிப்படுத்தல்களின் படி பணியகத்தின் நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டுள்ள பெறுமதி மற்றும் மீதி உறுதிப்படுத்தல்கள் என்பவற்றின் பெறுமதிகளுக்கிடையில் மொத்தம் ரூபா.18,030,689ஆன வேறுபாடு

வேலை முகவர் நிறுவனங்கள் மூலம் பேணப்படுகின்ற கணக்கீட்டு நடவடிக்கைகளின் செவ்வைத்தன்மை தொடர்பான உறுதிப்பாட்டினை பணியகத்திடம் வழங்க இயலாது. ஆயினும் வங்கி இரசீதுகளில் காண்பிக்கப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பணியகத்தால் கணக்கீடுகளை மேற்கொள்ளப்படுகின்றது மீதி உறுதிப்படுத்தல் கணக்காய்வின் ஒரு அம்சம் மட்டுமாவதுடன்,ஏனைய

மீதிகளை உறுதிப்படுத்தல் மற்றும் நிதிக் கூற்றுகளில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிகள் என்பவற்றுக்கிடையில் கணிசமான அளவிலான ஏற்றத்தாழ்வுகள் அவதானிக்கப்படுவதால்

அது தொடர்பாக தேடிப்பார்த்து திருத்தம் செய்ய வேண்டிய மீதிகளை திருத்தம் செய்வதற்கும், நீண்டகாலமாக தீர்க்கப்படாத மீதிகள் தொடர்பாக உரிய வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்களை அறிவுறுத்தப்பட்டு தீர்ப்ப-

| | | |
|---|---|---|
| அவதானிக்கப்பட்டது. | அட்டவணைகளை பரிசோதனை செய்வதன் மூலம் மேற்படி மீதிகளின செல்லுப்படி தன்மை ஒப்பாய்வு செய்யலாம். | தற்கு அல்லது வருமானத்தில் எடுப்பதற்கு தேவையான நடவடிக்கை மேறகொள்ளுதலும் வேண்டும். |

## 1.6 கிடைக்கப் பெறுவனவைகளும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகளும்

### 1.6.1 செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் வேலைவாய்ப்புகளுக்காக வெளிநாடு செல்கின்ற தொழிற்படையினரிடமிருந்து பல்வேறு காரணங்களின் மீது பிடிபணமாக வைத்துக் கொள்ளப்பட்டு, மீண்டும் செலுத்தப்பட வேண்டிய மொத்தம் ரூபா.668,986,984ஐ புலம்பெயர்ந்த தொழிற்படையினரின் காப்புறுதி நட்டஈடாக கிடைக்கப்-பெற்றுள்ள ரூபா. 51,239,587ம் தொழில் முகவர் நிறுவனங்களுக்கு தீர்க்கப்பட வேண்டிய மொத்தம் ரூபா.281,344,569ம்காணப்பட்டதுடன், குறித்த பணத் தொகை பல்வேறு காரணங்கள் மீது செலுத்தாமல் நீண்ட காலமாக பணியகத்தில் பிடிபணமாக வைக்கப்பட்டிருந்தது. | செவ்வையான அட்டவணைகளுடன் உரிய கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக கோரிக்கைகளை முன்வைத்த தரப்புகளிடம் கொடுப்பனவு நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படுவதுடன்,ஆதார ஆவணங்கள் அல்லது வேறு ஏதேனும் குறைப்பாடுகள் காரணமாக இது வரை கவனிக்கத்தக்க எண்ணிக்கையிலான விண்ணப்பங்களை நிதிப் பிரிவிடம் கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்படவில்லை. உரிய கோரிக்கைகளை சரியான வகையில் சமர்ப்பித்த பின்னர் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தற்போது செலுத்தாதுள்ள காப்புறுதி நட்டஈட்டு தொகை அடங்கலாக செலுத்தப்பட வேண்டிய ஏனைய பணத் தொகையினை துரிதமாக செலுத்துவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் ஒழுங்கமையாமை

| சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர் | இணங்காமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| 2018ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 7 (1) (ஆ) மற்றும் 42 பந்திகள் | கணக்காய்விற்காக தகவல்-கள், பதிவேடு, தெளிவுபடுத்தல், அறிக்கை அல்லது சான்றினை கோருதலானது, கோரிக்கை கிடைக்கப்பெற்ற திகதி தொடக்கம் வேலை செய்கின்ற இருபத்தோரு நாட்களுக்கு குறையாத காலப் பகுதியில் வழங்கப்படுதல் வேண்டுமா- | கடிதக் கோவை கணக்காய்விடம் சமர்ப்பிக்காமைக்கு காரணங்கள் எழுத்தில் உசாவியிருந்த போதிலும், முகாமைத்துவத்தால் அதற்கு ஏற்புடையதான தெளிவுபடுத்தல் மேற்- | அவ்வாறான நிலைமைகள் மீண்டும் ஏற்படாதிருப்பதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டுமென்பதுடன், கடிதக் கோவைகளை கணக்காய்விடம் |

| | | |
|---|---|---|
| யினும், 2020 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக, வெளிநாட்டு தூதரகங்களில் அமைந்துள்ள தொழிலாளர் நலனோம்பல் பிரிவுகளில் சேவைக்காக அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கும், இணைப்பதற்கும் ஏற்புடையதான கடிதக்கோவையை 2020 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆந் திகதி தொடக்கம் 4 சந்தர்ப்பங்களில் எழுத்திலான கடிதம் மூலம் கோரியிருந்த போதிலும், அந்தக் கடிதக் கோவையினை கணக்காய்விடம் சமர்ப்பித்தல் 2021 ஆம் ஆண்டு நவம்பர் 09 ஆந் திகதி வரை 175 நாட்கள் தாமதப்படுத்தப்பட்டிருந்தது. | கொள்ளப்படவில்லை. | சமர்ப்பிக்கப்படாமைக்கான காரணங்களை பரிசோதனை செய்து ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளதல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைபயன்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுகளின் பிரகாரம் மீளாய்விற்கான ஆண்டுக்காக குழுக்களினதும் பணியகத்தினதும் நிதிசார் விளைபயன் ஒழுங்குமுறையில் ரூபா. 743,891,274 மற்றும் ரூபா. 736,961,354 ஆன நட்டம் ஏற்பட்டதுடன், அதற்கு நேரொத்ததாக கடந்த ஆண்டின் நிதிசார் விளைபயன் ஒழுங்குமுறையில் ரூபா. 756,402,731 மற்றும் ரூபா. 759,418,513 ஆன இலாபம் காணப்பட்டது. அதன்படி குழுக்களினதும் பணியகத்தினதும் நிதிசார் விளைபயன் ஒழுங்குமுறையில் ரூபா.1,500,294,005 ஆல் மற்றும் ரூபா. 1,496,379,867 ஆன வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு கம்பெனியின் வருமானம் குறைவடைதல் பிரதான காணரமாகி உள்ளது.

## 3. தொழில்பாட்டு மீளாய்வு

### 3.1 அடையாளம் காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| பணியகத்தில் சேவையாற்றி 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி தொடக்கம் சேவையிலிருந்து அகற்றப்பட்ட நபரது பணிக்கொடை தொகை 1992 ஆம் ஆண்டு 62 ஆம் இலக்க பணிக்கொடை செலுத்தும் திருத்த சட்டத்தில் 4 (அ) பந்தி பிரகாரம் உரிய காலப் பகுதியில் செலுத்தாமை காரணமாக ரூபா.131,746 அபராதப் பணம் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்ட போதிலும், அதற்கு பொறுப்பு கூற வேண்டிய அலுவலர்கள் தொடர்பில் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | திரு.ஆர்.ஏ.ஜீ.எஸ் ஜயசிங்க அவர்களிடம் செலுத்தப்பட வேண்டிய பணக்கொடை செலுத்தல் தாமதமடைதல் காரணமாக தொழில் திணைக்களத்தால் கோவையிடப்பட்ட முறைப்பாடு பிரகாரம் வழங்கிய தீர்மானத்திற்கு அமைவாக இந்த மிகை கட்டணம் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. | இந்த மிகை கட்டணம் செலுத்துவதற்கு பொறுப்பு கூற வேண்டியஅலுவலர்களிடமிருந்து குறித்த பணத்தொகையினை ஈடுசெய்வதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கொரிய நாட்டு வேலைவாய்ப்புகளுக்காக வெளியேறுகின்ற தொழிற்படையினரது விமான அனுமதிச்சீட்டுகளை ஒதுக்கி கொள்ளுதல், இரத்துச் செய்தல் மற்றும் மீளவும் மீளளிப்புச் செய்தல் என்பன பணியகத்தால் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும், திட்டமிடப்பட்டவாறு புலம்பெயருவதற்கு முடியாது போன 51 புலம்பெயர்பவர்கள் தொடர்பில் மேற்கொண்ட கணக்காய்வு மாதிரி பரிசோதனைக்கமைவாக, 25 தொழிற்படையினரின் அனுமதிச்சீட்டு கட்டணங்களை மீளவும் மீளளிப்புச் செய்யவில்லை எனவும், 11 பேர்களிடம் மீளளிப்புச் செய்திருந்த பெறுமதிகளுக்கிடையில் அசாதாரண மாற்றங்கள் இருந்தமையும் அவதானிக்கப்பட்டது. இரண்டு முறை அனுமதிச்சீட்டுகளை கொள்வனவு செய்வதற்கு நேரிட்ட 05 தொழிற்படையினரின் பொருட்டு முதலாவதாக செலுத்திய பணம் மீளளிப்புச் செய்யப்பட்டதாக தகவல்கள் பதிவாகியிருக்கவில்லை என்பதுடன், மீண்டும் பணம் செலுத்த வேண்டி ஏற்பட்டதால், கொரியாவிற்கு செல்வதற்கு ஒருவரிடம்ரூபா. 132,000 தொடக்கம் ரூபா. 162,300இற்கு இடையில் பணம் செலவிடுவதற்கு நேரிட்டிருந்தது. அதேபோன்று வீசா நிராகரிக்கப்பட்ட 04 புலம்பெயர்பாளர்களின் மொத்தம் ரூபா.299,700 ஆன பணத்தொகை மீளவும் மீளளிப்புச் செய்யப்படவில்லை. | இந்த நிகழ்ச்சித்திட்டத்தை முறைசார்படுத்துவதற்காக தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | கடந்த காலப் பகுதியில் பல்வேறு காரணங்களின் மீது, இரத்துச் செய்யப்பட்ட விமான அனுமதிச்சீட்டுகளுக்கு பணம் மீளளிப்புச் செய்யும் முன்னேற்றத்தை மிள பரிசோதனை செய்தல் வேண்டுமென்பதுடன், ஏற்புடைய விமான அனுமதிச்சீட்டுகளை முகவர் நிறுவனங்கள் மூலம், மேலும் மீளளிப்புச் செய்து கொள்ள வேண்டியுள்ள பணத் தொகையினை மீளளிப்புச் செய்வதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) 2019 ஆம் ஆண்டில் பணியகத்தால், வெற்றிடமாக இருந்த 25 முகாமைத்துவ உதவியாளர் பதவிகளுக்கும் 25 அலுவலக உதவியளார் பதவிகளுக்கும் அதன் இணையதளத்தில் வெளியிடப்பட்ட அறிவிப்பு மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்பங்களிலிருந்து முகாமைத்துவ உதவியாளர் பதவிகளுக்காக 963 விண்ணப்பத்தாரிகளையும், அலுவலக பணியாளர் பதவிகளுக்காக 659 விண்ணப்பத்தாரிகளையும், அதாவது பதவிகளின் எண்ணிக்கை போன்று 30 மடங்கிற்கு அதிகமான எண்ணிக்கையினரை 3 நேர்முகப் பரீட்சை சபைகள் மூலம் 13 நாட்கள் நேர்முகப் பரீட்சைகளை நடாத்தப்பட்டிருந்தது. நேர்முகப் பரீட்சை சபையின் உறுப்பினர்களுக்கும் உதவி பணியாற்றொகுதியினறுக்கும் செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த ஒழுங்குமுறையில் ரூபா. 2,000 ம் மற்றும் ரூபா. 650 ஆன கொடுப்பனவை முறைவழியான அனுமதியின்றி ஒழுங்குமுறையில் | ஆட்சேர்ப்புத் திட்டம் பிரகாரம், தகைமைகளை பூர்த்தி செய்த எல்லா அபேட்சகர்களையும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.<br>அவர்களது தகைமைகளை பரிசோதனை செய்த பின்னர் சம்பந்தப்பட்ட கொடுப்பனவுகளை பணியகத்தின் தலைவரது அனுமதியுடன் செலுத்தப்பட்டுள்ளது. | தாபன விதிக் கோவையில் ஏற்பாடுகளின் பிரகாரம் வெற்றிடமாகிய பதவிகளின் பொருட்டு மிகவும் பொருந்துகின்ற விண்ணப்பத்தரிகளிடமிருந்து முறையான அடிப்படையின் பேரில் தெரிவு செய்கின்ற, வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையினரை நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்பதுடன், நேர்முகப் பரீட்சை சபையின் கொடுப்பனவுகளை அதிகரித்துக்கொள்வதற்கு முறையான அனுமதி பெற்றுக்கொள்- |

| | | |
|---|---|---|
| ரூபா.4,000 ம் மற்றும் ரூபா.1000 ம் வரை அதிகரித்து மொத்தம் ரூபா. 585,750ஐ செலுத்தப்பட்டிருந்தது. | | ளுதல் வேண்டும். |
| (இ) 2016ஆம் ஆண்டில் பணியகத்தின் ஆட்சேர்ப்புகள், தரமுயர்வுகள், நிரந்தரப்படுத்தல் தொடர்பில் பரிசோதனை செய்வதற்காக நியமனம் செய்த குழுவின் பரிந்துரைகள் தொடர்பாக திருப்தியடையாத பணியகத்தின் அலுவலர்கள் தொடரப்பட்டிருந்த இரண்டு வழக்குகளுக்கு ஏற்புடையதாக சட்டத்தரணி சேவையினை பெற்றுக்கொள்வதற்காக ரூபா. 2,882,375 ஆன பணத்தொகையினை பணியகம் செலவிடப்பட்டிருந்தது.<br><br>மேற்படி குழுவின் பரிந்துரைகள் மீது தரமுயர்வுகள் வழங்கியிருந்த 09 பேர்களுக்கிடையில் 04 அலுவலர்கள் தரமுயர்வு பெற்றிருந்த பதவிக-ளுக்காக தகைமைகளை பூர்த்தி செய்ய-வில்லையென கணக்காய்வு மாதிரி பரிசோத-னையிலும் வெளிப்படுத்திக் கொள்ளப்பட்டதுடன், மேற்படி வழக்கு தொடரப்பட்ட அலுவலர்கள் சம்பந்தப்பட்ட குழுவிடம் சமர்ப்பித்திருந்த குற்றங்குறைகள் தொடர்பாக தமது பரிந்துரைகளில் உள்ளடக்க முடியாமை தவறுதலாக ஏற்பட்டதென குழுவின் தலைவர் ஏற்றுக் கொண்டிருந்தார். | பணியகத்தின் அலுவலர்-களுக்கு தரமுயர்வுகளை வழங்கும் போது ஏற்பட்-டுள்ள முறையற்ற நிலை-மைகள் தொடர்பில் செவ்வையான தகவல்-களை வெளிப்படுத்திக் கொள்வதற்காக அடிப்-படை புலனாய்வு விசார-ணை மேற்கொள்வதற்கு அலுவலர் ஒருவரை நியமனம் செய்யப்பட்-டுள்ளது. | இந்த நடவடிக்கைக-ளுக்காக நியமனம் செய்த குழு கவனயீனமாக செய-ற்பட்டதன் காரணமாகசட்டக் கட்டணங்களாக இவ்வாறான சிக்கனமற்ற செலவினை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளது என அவதானிக்கப்படு-வதால் அவ்வாறு கவன-யீனமாக பணியாற்றிய அலுவலர்கள் தொடர்பில் தேவையான ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்-ளுதல் வேண்டும். |

### 3.3 கருத்து வேறுபாடகளுக்கு காரணமாகிய கெலாடுக்கல்வாங்கல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ)2020 ஆம் ஆண்டு சனவரி தொடக்கம் பணியகத்தின் பணிப்பாளராக நியமனம் பெற்ற அலுவலர் ஒருவர் 2020 சனவரி 13 ஆந் திகதிய PS/SP/circular/02/2020 ஆம் இலக்க சனாதிபதி செயலாளரின் சுற்றுநிருபத்திற்கு முரணாக அன்றைய திகதி தொடக்கம் பணியகத்தின் முனைப்பான பணிப்பாளராக நியமனம் செய்யப்பட்டிருந்ததுடன், 2020 ஆம் ஆண்டு மார்ச் 02 ஆந் திகதி தொடக்கம் பணியகச் சட்டத்தில் 11(1) மற்றும் 14(3) பிரிவுகளுக்கு முரணாக மீண்டும் பணியகத்தின் உபதலை-வராகவும், 2020 ஆம் ஆண்டு நவம்பர் தொடக்கம் விடய பொறுப்பு அமைச்சரால் பணிப்பாளராக (நிருவாகம்) முழு நேர காலத்திற்கும் நியமனம் செய்து,கணக்காய்வு திகதியான 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 17 ஆந் திகதியிலும் செவையாற்றியிருந்தார்.<br><br>இந்த நியமனங்கள் சட்ட ரீதியற்றதால் உடனடியாக இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை | அமைச்சரிடம் உள்ள அதிகாரங்களின் பிரகாரம், நியமிக்கப்படும் அலுவலர்க-ளுக்கு தேவையான எல்லா வசதிகளையும், பணியக-த்தால் மேற்கொள்ள வேண்டியுள்ளது. சட்டத்தின் 11(1) மற்றும் 14(3) பிரிவுகளுக்கமைவாக விடய பொறுப்பு அமைச்சரிடம் கையளிக்கப்பட்டுள்ள அதி-காரங்களின் பிரகாரம், பணி-யகத்தின் நிருவாக நடவடிக்-கைகளை வினைத்திறனுடன் பராமரிப்பதற்கு தலைவர் அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக இந்த அலுவலரை நியமனம் செய்யப்பட்டிருந்தது. | பணியகத்திற்காக அங்-கீகரிக்கப்பட்ட மற்றும் வெற்றிடமாகவுள்ள பதவிகளின் பொருட்டு மட்டும் ஆட்சேர்ப்புத் திட்டங்களின் படி தகை-மைகளைக் கொண்-டுள்ள அலுவலர்களை முறைவழியிலான முறைகளுக்கமைவாக ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| மேற்கொள்ளுமாறு சனாதிபதி செயலாளரால் அறிவிக்கப்பட்டிருந்தது. அதேபோன்று நியமனம் செய்கின்ற சட்டத்தில் 14(3) இன் கீழான நியமனம் ஆவதால் நியமனமாக கருத முடியா தெனவும், தற்போதுள்ள பணிப்பாளர் சபையின் உறுப்பினராக இவ்வாறான நியமனங்கள் பிரச்சினைகளுக்கு காரணங்களாகிவிடுமெனவும்,(complicit of interest) சட்டமா அதிபர் திணைக்களத்தாலும் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இவ்வலுவலர் பொருட்டு உத்தியோக-பூர்வ வெளிநாட்டு சுற்றுலாவிற்காக ரூபா. 450,197 ம் சம்பளம் மற்றும் படியாக ரூபா. 1,208,545 ம் போக்குவரத்து வசதிகளையும் பணியகத்தின் நிதியைக் கொண்டு வழங்கியிருந்தது. | அதற்காக பணிப்பளார் சபை அனுமதி வழங்கியள்ளது. இஸ்ரேல் அரசாங்கத்துடன்,உடன்படிக் கைகளை கைச்சாத்திடுவதற்காக சந்தைப்படுத்தல் பிரிவின் கோரிக்கைக்கு அமைவாக இந்த அலுவலர் வெளிநாடு சென்றுள்ளார். எவ்வாறாயினும் இந்த நியமனம் அமைச்சர் அவர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் நீக்கம் செய்தல் தொடர்பாகவும் அமைச்சர் அவர்கள் தீர்மானமெடுத்தல் வேண்டும். | |
| (ஆ) கொரிய நாட்டு வேலைவாய்ப்பு பெறுபவர்களின் பொருட்டு விமானச் சீட்டுகளை பெற்றுக்கொள்ளும்போது ஏற்பட்டிருந்த நிதி முறைக்கேடுக்கு ஏற்புடையதாக 2019 ஆம் ஆண்டு சனவரி 10 ஆந் திகதி பணியகத்தின் பொது உதவியாளர் சேவையில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர் ஒருவருக்கு பணித்தடை மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதற்கு ஏற்படையதான ஒழுக்காற்று விசாரணை நடாத்தல் தாபன விதிக் கோவையின் 11 ஆவது தொகுதியில் 13.2 பிரிவில் குறிப்பிடப்பட்டள்ளவாறு முடிவுறுத்தப்படவில்லை என்பதுடன், எந்தவொரு விசாரணையொ ஒழுக்காற்று நடவடிக்கையோ இன்றி சம்பந்தப்பட்ட அலுவலரை 2020 யூலை 16 ஆந் திகதி தொடக்கம் மீள சேவையில் அமர்த்தப்பட்டிருந்தது.<br>ஆயினும், விமானச்சீட்டுகளை கொள்வனவு செய்யும் பிரிவை, இந்த நிகழ்வின் பின்னர் மூடிவிடுவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை மேற்கொண்டிருந்தது. | இதற்கு ஏற்புடையதாக உள்ளக கணக்காய்வு பரிசோதனை முடிவுறுத்தப்பட்டுள்ளது. குறித்த பரிசோதனை அறிக்கை மீது குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலர்களிடம் குற்றப்பத்திரிக்கை வழங்குவதற்கும், ஏனைய அலுவலர்களிடம் விளக்கமளிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளபட்டுள்ளது. | இந்த நிகழ்விற்கு ஏற்புடையதாக ஒழுக்காற்று நடவடிக்கைகளை துரிதமாக முடிவுறுத்தப்பட்டு தேவையான ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளும் செயற்பாட்டினை முறைவழிப்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஈ) பணியகத்தின் அலுவலர்களுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டதாக பதிவாகியிருந்த 20 துஷ்பிரயோகநிகழ்வுகளுக்கு ஏற்புடையதாக மேற்கொண்ட மாதிரி கணக்காய்வு பரிசோதனைகள் மற்றும் ஏனைய புலனாய்வுகளில் வெளிப்படுத்தியிருந்த விடயங்களில் தற்கால நிலைமையினை பரிசோதனை செய்யும்போது, வெளிப்படுத்திக் கொண்டவாறு 7 நிகழ்வுகளுக்கு ஏற்புடையதாக ஒழுக்காற்று நடவடிக்கைகள் தாமதமாகியதன் காரணமாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள அலுவலர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்வதற்கு முடியவில்லை. 6 நிகழ்வுகள் தொடர்பில் பொறுப்பு கூற வேண்டியவர்களை அடையாளம் காண்பதற்கு முடியாதிருந்தது. மேலும் 06 நிகழ்வுகளுக்கு ஏற்புடையதாக குற்றப்பத்திரிக்கைகள் பெற்றிருந்த அலுவலர்கள் முறையான ஒழுக்காற்று | 2012மற்றும்2014காலப்பகுதிக்குள் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் நிகழ்ந்துள்ள, நிதி முறைக்கேடுகள் தொட-ர்பில், கணக்காய்வாளர் அதிபதியின் திணைக்களத்து அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா நிகழ்வுகளுக்கும் மேற்கொண்டுள்ள செயற்பாடுகளை உள்ளடக்கி தயாரித்த இற்றைப்படுத்திய சாராம்ச அறிக்கை கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | பணியகத்தின் ஒழுக்காற்று விசாரணை செயற்பாடு முறைசார்படுத்துவதன் ஊடாக தாபனத்தில்நிதிசார் மற்றும் நிருவாக ஒழுக்காற்றை உரியவாறு பராமரிப்பதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

நடவடிக்கைகளின் போது, சுற்றவாளியாக்கப்பட்டிருப்பினும், உண்மையாக பொறுப்பு கூற வேண்டியவர்களை அடையாளம் காணப்பட்டிருக்கவில்லை.ஒரு நிகழ்வுக்கு எற்புடையதாக முறையான ஒழுக்காற்று நடவடிக்கையின் போது குற்றவாளியென உறுதிப்படுத்தப்பட்டிருந்த அலுவலரை விடுவிக்கப்பட்டிருந்தது.

அதேபோன்று மேற்படி 12 நிகழ்வுகளுக்கு தவறாக பயன்படுத்தியதாகபதவாகியிருந்தபணத் தொகையின் மொத்தம் ரூபா61,130,337 ஆனதுடன், அது தொடர்பில் பொறுப்பு கூற வேண்டியவர்களை அடையாளம் காணப்பட்டிருக்கவில்லை.

### 3.4 பயனற்ற அல்லது குறை பயன்பாட்டுடன் கூடிய சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| பணியகம் 2015 ஆம் ஆண்டில் ரூபா.52 மில்லியன் பெறுமதிக்கு 50 ஆண்டுகளுக்கு முன்னர் குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொண்டு மேலும்ரூபா. 1,146,095 ஐ செலவிடப்பட்டிருந்த காணியை எந்தவொரு பயனுள்ள நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தாது 06 ஆண்டுகள் முழுவதும் பயனற்றதாக காணப்பட்டதுடன், அதற்கு ஏற்புடையதாக எழுத்திலான உடன்படிக்கையும் இருக்கவில்லை. | குத்தகை உடன்படிக்கை தயாரித்து எதிர்கால நடவடிக்கைகளின் பொருட்டு முன்வைக்குமாறு நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தால் அத்தியாவசியமற்ற செலவினங்கள் மற்றும் முன்னுரிமையில் குறைந்த செலவினங்களை பதவழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும்படி அறிவிக்கப்பட்டுள்ளதால், இந்த காணியில் முன்தயாரிப்பு கட்டிடமொன்றை நிருமாணிப்பதற்காக அனுமதியை பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. | இந்த சொத்துக்களை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தல் வேண்டும். |

## 4. கணக்கீட்டு நெறிமுறைகளும் நள்ளாளுகையும்

### 4.1 நிதிக் கூற்றுகளை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி /12 ஆம் இலக்க அரச தொழில் முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 6.5.1 பிரிவு மற்றும் 2004 பெப்ருவரி 24 ஆந் திகதிய 01/2004 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை பிரகாரம் நிதிக் கூற்றுகளை கணக்கு ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், மீளாய்விற்கான ஆண்டில் நிதிக் கூற்றுகளை சமர்ப்பித்தல் 2020 ஆம் ஆண்டு யூன் 23 ஆந் திகதி வரை தாமதப்படுத்தப்பட்டிருந்தது. | 2020ஆண்டில் நிலவிய தொற்று நோய் நிலைமை காரணமாக திட்டமிடப்பட்ட வகையில் நிதிக் கூற்றுகளை உரியவாறு கணக்கயாவ்ளார் அதிபதியிடம் சமர்ப்பிக்க இயலவில்லை. | சுற்றுநிருபங்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிக் கூற்றுகளை உரிய திகதிக்கு முன்னர் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |